# கொங்கு

ஆசிரியர்:
புலவர் செ. இராசு

ஆவணி

20005




ஆகஸ்ட்டு

1974

30 காசு

அறிவியல் வரலாற்றுத் திங்களிதழ்



# கொங்கு


கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ

தேனடை 4 15-8-74 தேனீ 8


## வணக்கம்

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் தொல்லியல்துறை தன் பதிவு அலுவலகங்களைத் திறந்துள்ளது. தமிழகத்தின் சிற்ப வளத்தினை, கலைச் செல்வங்களை ஆராய்வது இவர்களின் பணி. தொன்மைப் பொருட்கள் வரலாற்று ஆவணங்கள், கலைச் செல்வங்களை வைத்திருக்கும் தனியார், தாமே முன்வந்து இந்த அலுவலகங்களில் பதிவு செய்து கொள்ளலாம். அதனால் பின்னொரு காலத்தில் உரிமையாளர் பற்றிய கேள்வி எழும்போது, இப்பதிவு சான்று பகரும். தஞ்சை அலுவலக முகவரி இன்னொரு பக்கத்தில் வெளியாகியுள்ளது.

எழுத்துச் சீர்மை பற்றிய கேள்வித்தாள் ஒன்று இந்த இதழில் வெளியாகியுள்ளது. தமிழை எடுத்துப் படிக்கத் தெரிந்த அனைவரும் இக்கேள்வித் தாளைப்போல வெள்ளைத் தாளில் எழுதி நிரப்பி அனுப்ப வேண்டியது மிகவும் இன்றியமையாதது.

புதுச்சேரியில் நடந்த தமிழ்ப் பேராசிரியர்கள் மாநாட்டில், எழுத்துச்சீர்மை பற்றிப் பேசப்பட்டது. உகரவரிசைக் குறியீட்டைத் தேர்ந்தெடுப்பதில் மக்கள் கருத்தறிய ஆணையிடப் பட்டது. எனவே உதவுங்கள். கேள்வித்தாளை நீங்கள் நிரப்பி அனுப்புவதோடு உங்கள் நண்பர்களையும் அனுப்பக் கோருங்கள்.

—ஆசிரியர்.

# குன்றக்குடி

மா. சந்திரமூர்த்தி எம். ஏ.

இவ்வூர் இராமநாதபுரம் மாவட்டம் காரைக்குடிக்கு மேற்கே 9 கல் தொலைவில் உள்ளது. இங்கு மலையின் தென்பாகத்தில் மூன்று குடவரைக் கோயில்கள் உள்ளன. இவை கி. பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர்காலப் பணியாகும். இக் குடைவரையில் உள்ள சிற்பங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முதல் குடைவரை

இது பல்லவர்கால குடைவரையைப் போன்று அமைப்புடையது. செவ்வக வடிவான குடைவரையின் முன் இரண்டு சதுரத் தூண்கள் அமைந்துள்ளன. இக்குடைவரையில் எழில் வாய்ந்த சிற்பங்கள் பல உள்ளன. அடிமுடிகாணு அண்ணல், அரியரன் ஆடவல்லான் நான்முகன், திருமால், கொற்றவை. முருகன், பிள்ளையார், ஆகிய அனைத்து உருவங்களும் புடைப்புச் சிற்பங் களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

## கொற்றவை (துர்க்கை)

இங்குள்ள கொற்றவையின் சிற்பம் எழில் மிக்கது. தேவி கானத்து எருமைக் கருந்தலைமேல் நிற்கிருள். தேவியின் கைகளில் சங்கம், சக்கரம், வாள், கொடுவில், அனல், கபாலம் ஆகியவை காணபபடுகின்றன. மற்றொரு கை வரதமுத்திரையில் உள்ளது. கொற்றவையின் இருமருங்கிலும் மறவர்கள் வீற்றிருக்கின்றனர். தேவியின் வலப்புறத்தே வீரன் ஒருவன் அன்னைக்கு நவகண்டம் அளிக்க, தன் வலக்கையால் வாளை ஏந்தி அடிக்கழுத்தில் நெடுஞ்சிரத்தை அரியும் நிலையில் காட்டப் பட்டுள்ளான். இடப்புறம் அஞ்சலித்து மற்றொரு வீரனின் உருவம் காட்டப்பட்டுள்ளது. பண்டு மாற்றாரிடமிருந்து நாட்டைக் காக்க வஞ்சினம் கூறிய வீரர்கள் வெற்றி கிட்டியதும் கொற்றவைக்கு தலையை அரிந்து அவிப்பலி இடுதல் மரபு என்பதைச் சிலம்பு கூறும்.[1]

---

1 சிலம்பு -- வேட்டுவ வரி - 18
சிலம்பு -- வேட்டுவ வரி - 20

இவ்வாறு வீரர்கள் தங்கள் தலையை தலைப்பலி கொடுப்பதை கலிங்கத்துப் பரணி :

'சலியாத தனியாண்மைத் தருகண் வீரர்
தருகவரம் வரத்தினுக்குத் தக்க தாகப்
பலியாக உறுப்பரிந்து தரும் என்று
பரவுமொலி கடலொலிபோல் பரக்குமாலோ'
'அடிக்கழுத்தின் நெடுஞ்சிரத்தை அரிவராலோ
அரிந்தசிரம் அணங்கின்கைக் கொடுப்ப ராலோ
கொடுத்தசிரம் கொற்றவையைப் பரவு மாலோ
குறையுடலம் கும்பிட்டு நிற்கு மாமோ'

என விரித்துக் கூறும்.[2] இதன் அடிப்படையில் இங்குள்ள கொற்றவையின் சிற்பம் சிறப்பெய்துகிறது இவ்வாறு கொற்றவைக்கு தலையை அரிந்து கொடுக்கும் சிற்பங்களை மாமல்லை திரௌபதி ரதத்திலும்,[3] சிங்கவரம் குகையிலும்,[4] திருச்சி கீழ் குடைவரையிலும், திருப்பரங்குன்றத்திலும், திருவானைக்காவிலும்,[5] காணலாம். இதனைக் கம்பவர்மன் கால கல்வெட்டும் உறுதிப் படுத்துகிறது.[6]

### அரியரன் (மாலொருபாகன்)

அரியரனின் உருவம் நின்ற நிலையில் உள்ளது. அரியரன் நான்கு கைகளோடுக் காணப்படுகிறார். மேலிருக்கைகளில் மழுவும் சங்கமும் கொண்டு விளங்குகிறார் கீழ்க்கை அபயமளித்து, மற்ற கை தொடையின் மீதமர்ந்து நிற்கும் எழில் உருவாக இது காணப்படுகிறது. முடியை தாழ்சடையும், நீள்முடியும் அணி செய்கின்றன இச்சிற்பம் பிள்ளையார்பட்டி சிற்பத்தை விட அழகிலும், அமைப்பிலும் சிறந்து விளங்குகிறது. இச்சிற்பம் சைவமும் வைணவமும் வேற்றுமையின்றி அக்காலத்தில் கருதப்பட்டதைத் தெரிவிக்கின்றன இவ்வாறு சிவபெருமான் திருமாலின் ஒரு பகுதியாகவும், திருமால் சிவபிரானின் ஒரு பகுதியாகவும் இணைந்து விளங்கியதை

---

2. கலிங்கத்துப் பரணி, கோயில் பாடியது - 13, 15
3. இரா. நாகசாமி, 'மாமல்லை' பக் 104
4. மயிலை, சீனி. வேங்கடசாமி 'மகேந்திர வர்மன்' பக். 108. படம். 11.
5. A. V. Jeyechandran. "The Great Wall of Thiruvanaika Temple" P. P. 229. 'Thiruvanika Temple Souvenir (1970)
6. S. I. I. Vol. XII No. 106.

"தாழ்சடையும் நீள் முடியும் ஒளிமழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவு மொன்றா யிசைந்து"[7]

எனப் பேயாழ்வாரின் பாடல் நினைவூட்டுகின்றது.

**ஆடவல்லான் (நடராசர்)**

இங்குள்ள ஆடவல்லானின் சிற்பமும் எழில் மிக்கது. ஆடவல்லானின் கீழே இரண்டு கணங்கள் குடமுழாவும், தாளமும் வாசிக்கின்றன. இவ்விசைக்கேற்ற ஆடவல்லான் நடமாடுகிறார். ஆடவல்லான் எண்கரங்களோடு காணப்படுகிறார். கைகள் திசைகளைக் குறிக்கின்றன. 'திசைகள் எட்டும் திருக்கைகள்' என்பது திருமந்திரம்.[8] 'திசை தோள்' என்றார் சேரமான் பெருமாள் நாயனார்.[9] 'எண்டிசை எண்டோள்' என்றார் பட்டினத்து அடிகள்.[10] காமிகாகமும் இக்கருத்தைத்தான் குறிக்கிறது.[11] இவ்வாறு எண்திசை காட்டும் எண்கரங்களில் உடுக்கை, மழு, விடைக்கொடி, அனல், அரவம் ஏந்தி எழிலாக நடமாடுகிறார். தாண்டவமாடும் வேகத்தில், சடைமுடி அவிழ்ந்து, புரி சடைகள் இருபுறமும் அலைகின்றன. இச்சிற்பத்தின் அழகு நோக்கின்,

ஆதிபரன் ஆட, அங்கைக் கனல் ஆட
ஓதும்சடை ஆட, உன்மத்த முற்றாட
பாதிமதி ஆடப் பாராண்ட மீதாட
நாதமோ பாடினான் நாதாந்த நட்டமே

என்ற பாடலை நினைவூட்டுகிறது.

இரு கால்களையும் பின்னி ஆடும் ஆடவல்லானின் காலின் கீழ் முயலகன் காணப்படவில்லை. இச்சிற்பத்தில் கலையழகு கனிந்திருக்கிறது.

**இரண்டாம் குடைவரை**

இது மூன்றும் குடைவரையை விட சற்று பெரியது. மூன்றாம் குடைவரையை போன்றே கருவறையும் முக மண்டபத்தையும் உடையது. பாறையிலே 4½ அடி உயரத்தில் குடைவிக்கப்பட்ட லிங்கத்தின் ருத்திர பாகத்தில் பிரம்ம சூத்திரம் காணப்

7. 3-ஆம் திருவந்தாதி. 63, பேயாழ்வார்.
8 திருமந்திரம்
9. பொன்வண்ணத்தந்தாதி 19.
10. ஒருபா ஒரு பஃது
11. அர்ச்சனா விதிப்படலம். 335.

படவில்லை.

**வாயிற் காப்போர் சிலைகள் (துவார பாலகர்)**

இங்குள்ள முகமண்டபத்தில் இரண்டு வாயிற்காப்போரும், ஒரு கருடாந்திகரும் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன இங்குள்ள இரு வாயிற்காப்போரில் (துவாரபாலகர்) உருவங்கள் நிற்கும் நிலையிலும், உருவ அமைப்பிலும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட அமைப்பு உடையவை. ஒன்று வலக்காலை வளைத்து நின்ற நிலையில் (5½' உயரம்) இருகைகள் தாங்கி, இடக்கையை தொடையின் மீது (கடிகஸ்தத்தில்) வைத்து, வலக்கையை அரவம் சுற்றிய நீண்ட கைத்தண்டில் ஊன்றி உள்ளது. இதன் தலையிலே சடைபாரமும் மகுடமும் தரித்து, மாரிலே புரிநூலும் வயிற்றிலே கச்சையும், (உதரபந்தமும்) தோளிலே அனந்த வளையும் அணிந்து மானிட தோற்றமுடையதாகக் காணப்படு கிறது. அடுத்த சுவரில் உள்ள மற்றொரு வாயிற்காப்போரின் (6' உயரம்) மகுடத்தில் கொம்பைப் போன்ற இரண்டு வளைந்த அமைப்புகள் காணப்படுகின்றன. காதில் வட்ட குண்டலமும், மார்பில் முத்துக்கள் கோத்த பூணூலும் காணப்படுகின்றன. இவ்வுருவம் அகன்ற முகத்தையும், தடித்த உதட்டையும். கொண்டு விளங்குகிறது. இவை விஜயவாடாவில் உள்ள மொகல் ராஜபுரம் துவாரபாலகர் சிலையின் சிற்ப அமைதியைப் பிரதிபலிக்கின்றது.

**கருடாந்திகர்**

இக்குடைவரை முகமண்டப மாடத்தின் வடக்குச் சுவரில் திருமால் கருடனுடன் கருடாந்திகராக நின்ற நிலையில் (6' உயரம்) காட்சி அளிக்கிறார். நான்கு கைகள் கொண்ட இவ்வுருவத்தின் பின் வலக்கை சங்கம் ஏந்தியும், முன் வலக்கை வரதத்திலும், முன் இடக்கை கருடனின் தோளில் சாய்ந்தும் காணப்படுகிறது. தலையிலே நீண்ட கிரீட மகுடம் அணிந்து, மார்பிலே குறுக்குவார் (சன்ன வீரம்) தரித்து இடுப்பிலே நீண்ட பளுவான கச்சை அணிந்து காணப்படுகிறது. இதில் காணப்படும் நீண்டச் கச்சையும், தொங்கும் குஞ்சமும், வலது முன்காலில் ஓடும் நூலும், இடுப்பில உள்ள பட்டையான கச்சையும் (மடிபந்தமும்) இச் சிற்பத்தின் தொன்மையைக் கணிக்கச் சான்றாக விளங்குகின்றன. திருமாலின் மாரில் உபவிடத்திற்குப்பதில் சன்னவீரம் தரித்துள்ளது. இது தனிச்சிறப்புடையதாகும்.[12]

---

12. Nalam Killi "Caves of Kunnakkudi"
The Sunday Standard, March 28, 1965.

திருமாலின் அருகில் அடக்கமாகப் பக்திப் பரவசத்தில் ஈடுபாடு கொண்ட நிலையில் கைக்கட்டி நிற்கும் கருடனின் உருவம் (4' உயரம்) காணப்படுகிறது. இதனுடைய இறகுகள் இருபுறமும் காட்டப்பட்டுள்ளன. கருடாந்திகரின் சிற்பம் பாண்டியர் கால கைவினைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

**கல்வெட்டும் காலமும்**

இக்குடைவரைக் கோயிலின் வலது புறத்தூணில் வட்டெழுத்து கல்வெட்டு ஒன்று உள்ளது. இது இக்கோயிலை 'மாசிலீச்சுரம்' எனக்குறிக்கிறது. இக்கல்வெட்டு கி. பி. 8-ம் நூற்றூண்டு எழுத்தமைதியில் உள்ளது. எனவே இக்குடைவரைகி பி 8-ம் நூற்ண்டைச் சார்ந்ததாகக் கருதலாம்.

இக்குடைவரை முக மண்டபத்தில் அழகிய பைரவர் சிலை ஒன்று உள்ளது. இது தனிக்கல்லில் வடிக்கப்பட்ட சிற்பமாகும். இச்சிற்பத்தின் அருகில் உள்ள கல்வெட்டு சோணாடு வழங்கிய சுந்தரபாண்டியனின் 8-ம் ஆட்சி ஆண்டில் (கி. பி. 1224) சேத்திரபாலகரை செய்தளித்த வகையும், அதற்கு அளித்த கொடையையும் குறிக்கிறது. கல்வெட்டு குறிக்கும் சேத்திரபால பிள்ளையார் இங்குள்ள பைரவராக இருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[13]

**மூன்றும் குடைவரை**

இக்குடைவரை சதுரமான கருவறையும், செவ்வகமான முக மண்டபத்தையும் உடையது. கருவறையின் நடுவில் சித்தார்த்தமாக லிங்கம் காணப்படுகின்றது. லிங்கத்தின் ஆவுடையார் சதுரமான அமைப்புடையது. ஆவுடையாரின் கூம்பு வழக்கத்திற்கு மாறுக வலப்புறம் அமைந்துள்ளது. முக மண்டபத்தின் நடுவே இரண்டு தூண்களும், சுவரையொட்டி இரண்டு அரைத்தூண்களும் உள்ளன. இக்குடைவரை சிற்பங்கள் செதுக்கப்படா எளிமையான அமைப்புடையன. சுவரில் உள்ள கல்வெட்டுகள் இறைவனை 'திருக் குன்றக்குடி திருமலையுடைய நாயனுர்' என்றும் 'ஸ்ரீ மூலஸ்தானமுடைய நாயனுர்' என்றும் குறிக்கின்றன.

**பிறச் சிறப்புக்கள்**

இங்குள்ள சிற்பங்களில் சில சிறப்புக்கள் குறிக்கத்தக்கன. சுப்ரமணியரின் மார்பில் சன்னவீரத்திற்குப் பதில் உபவீடம் உள்ளது. கருடாந்திகரின் மார்பில் உபவிடத்திற்கு பதில் சன்ன

---

13. Ibid.

வீரம் காணப்படுகிறது. லிங்கோத்பவரின் இடுப்பிற்கு கீழ் உள்ள லிங்கப்பகுதி பிள்ளையார்பட்டி சிற்பத்தைப் போன்று தட்டையான தூணை ஒத்து செதுக்கப்பட்டுள்ளது லிங்கோத்பவரின் பக்கத்தில் உள்ள பிரம்மாவின் அருகில் அன்னவாகனம் காட்டப்பட்டுள்ளது. ஆனால் மறுபுறத்தில் உள்ள விஷ்ணுவிற்கு வாகனம் காட்டப்படவில்லை நடமாடும் ஆடவல்லானின் கீழ் முயலகன் காட்டப்படவில்லை. முதல் குடைவரையின் வெளிப்புறத்தில் பத்மாசனத்தில் சண்டிகேசுவரர் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள பிள்ளையார், முருகன் ஆகிய சிற்பங்களைத்தவிர அனைத்துச் சிற்பங்களுக்கும் சுண்ணமும் சுதையும் பூசப்பட்டுள்ளன. இவை அனைத்தும் கி. பி. 8-ம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர்காலப் பணிகளாகும்.

# Coins of Southern India

இப்பெயரில் சர். டபிள்யூ எலியட் என்ற அறிஞர் மிகச் சிறந்த நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் பல நாணயங்கள், படத்துடன் வெளியாயின. அதில் கொடுக்கப்பட்ட தமிழ் வாசகம் பொருத்தமாக இல்லை. அவற்றின் திருந்திய வாசகம், தமிழகத் தொல்லியல் துறையின் தமிழிகா, முதல்தொகுதி மூன்றும் பகுதியில் வெளியாகியுள்ளன. திருந்தப் படித்தவர் இரா. நாகசாமி. இவை இலங்கை செம்பு நாணயங்கள்.

| எண் | பழைய வாசகம் | புதிய வாசிப்பு |
|---|---|---|
| 132 | கேது | சேது (சேதுபதி மன்னர்களின் வெளியீடாகலாம்) |
| 136 | சமரச கோலாகல | எல்லாம் தலையானன் சுந்தர பாண்டியன் வெளியிட்டதாக இருக்கலாம் |
| 137 | சமரச கோலாகல | எல்லாம் தலையானன் |
| 139 | கொற்கை ஆண்டார் | சோனாடு கொண்டான் |
| 140 | கூன பாண்டிய | கு-ல (குலசேகர பாண்டியனாக இருக்கலாம்) |
| 144 | தெருமலை | விக்ரம |
| 160 | ராஜ ராஜ (?) | எல்லாம தலையானன் |

—கொடியன்.

# நடுகல் வழிபாடு-2

புலவர் செ. இராசு

## இடைக்கால நடுகல் (சில வழக்கங்கள்)

ஒரு புலவர் நடுகல்லை 'நடும்கல்' (நடுங்கல்) என்று குறிக்கின்றார்.[25] நச்சினார்க்கினியர், தொல்காப்பியர் காட்சி முதலியனவாகக் கூறுவனவற்றை கல்லை ஆராய்ந்து காண்பது, நட்டபின் கல்லில் வீரனைக் காண்பது என இரண்டாக்கி பன்னிருதுறையாக்குவர். இது அவர் காலத்திலிருந்த வழக்கத்தைக் காட்டுகிறது.

கல் தேடும்பொழுது தெய்வத்தை உடம்பிலே நிறுத்தித்தேடுவர். கல்லை எடுக்கும்பொழுது அதன் மீது நீர் பெய்து, கள் தெளித்து, பூத்தூவி, மாலையிட்டுத் துடியினை ஒலித்து எடுப்பர். அப்போது மணிகள் ஒலிக்கும். நறும்புகையூட்டிச் சந்தனமும் பூசுவர். கல்லிற்கு ஆட்டிய நீரை வான் நீரினும் தூயதென்று தாமும் ஆடுவர். வீரன் மனங்குளிரக் குளத்தின் உள்ளும் கல்லை இடுவர் வீரர்களும் சுற்றத்தினரும் இருப்பர் பாணர், கூத்தர் புடைசூழ நெடுந்தூரம் கல்தேடிச் செல்வதுண்டு.

வண்டியிலேற்றி ஆரவாரத்துடன் கல் கொண்டு வரப்படும் பல வீரர்கட்கு ஒன்றாகக் கல் நடுவர், பீடம் அமைத்து விளக்கு வைப்பர். இமயம் போல் வாழ்க என்று வாழ்த்துவர். கோயிலும், மதிலும் வாயிலும், அமைக்கப்படுதலும் உண்டு.[26] தொல்காப்பியர் கூறிய 'பெரும்படை' பிற்காலச் சோழர் காலத்தில் வேந்தருக்கும் வீரருக்கும் எடுக்கப்பட்ட 'பள்ளிப்படை' ஆயிற்றுப் போலும்.[27]

## புறத்திணை நடுகற்கள்

புறத்திணை எட்டிற்கும் சான்றாக விளங்கும் நடுகற்கள் இன்று நமக்குக் கிடைக்கின்றன. இதனால் புறத்திணை என்பது நாட்டில்

---

25. பெருந்தொகை 1177
26. நச்சினார்க்கினியர் உரை புறம்-5
    பு. வெண்பாமாலை பொது 8-14
. பிற்காலச் சோழர் சரித்திரம் 1-76

மெய்யாகவே நடைபெற்ற நிகழ்ச்சி. கற்பனை அன்று என்பது பெறப்படுகிறது. இந்நடுகற்கள் பலவும் தொல்காப்பிய உரையாசிரியர் காலத்திற்கும், புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் காலத்திற்கும் முற்பட்டவை. எனவே அவர்கள் இச்சிற்பங்களைப் பார்த்தும் தம் கருத்துக்களை எழுதி இருக்கலாம்.

வெட்சி (ஆநிரை கவர்தல்)

"கோ விசைய நரசிங்க பருமற்கு இரண்டாவது வாணகோன் அதிரைசர் சேவகர் மீகொன்றை நாட்டு மேல் வேளூர் ஆளும் பறைய மாளியர் இவ்வூர்த் தொறுக் கொண்ட ஞான்று பட்டார்."[28]

கரந்தை (ஆநிரை மீட்டல்)

"கோ விசைய கம்ப பர்மற்கு
யாண்டு ஆறுவது கொங்க
த் தெழுமாத்தூர் இருந்து
வாழும் சாகாடச் சிற்றன்
மீகொன்றை நாட்டு
ப்புளியூர் எரு
மை கொண்ர ஞா
ன் று பூசல்லோடி
மேல் வேளூட்டு மணி
க்கல வடலூரில் முட்டி எ
ருமைத் தொறு மீட்டுப் பட்டா
ன் சாகாடச் சிற்றன்".[29]

வஞ்சி (பகைவர்மேல் செல்வது)

"மாந்த பருமற்குப் பதினெ
ன்றுவது கொங்கணி அரைசரு
படைஒடு சிரி கங்கரைசரு
சங்க மங்கலத் தெறிந்தஞா
ன் று சிரி கங்கரைசரு சேவக
ரு விசைய கொற்ற
டையாரு எறிந்
து பட்
ட கல்"[30]

---

28. எபிகிராபியா இண்டிகா 32-110, 111
29. செங்கம் நடுகற்கள் 1971/57
30. செங்கம் நடுகற்கள் 1971/124

காஞ்சி (வரும்பகையை எதிர்த்து நிற்பது)

''கோ விசைய மகேந்திரபரு
மற்கு யாப்பத் தொன்பதாவது
வாணகோ அரைசரு மருமக்கள் பொ
ற்றொக்கையார் சருக்கிருந்த ஊர் போ
ந்தை மேற் சக்கரவரு படை வந்த ஞா
ன்று ஞக்கையார் இளமகன் வத்தாவ
ன் மகன் னந்
தி எறிந்து பட்டா
ன் கல்''[31]

நொச்சி (தம் கோட்டையைப் பாதுகாத்தல்)

''தென்வேணாட்டு மேலைக் கரு
ங்காலிப்பாடி சிலகில் காவேட்வைய
ன் அடியேன் பறையன் புளியனேன்
ஊரழியப் போகே
னென்று பட்டான்''[32]

உழிஞை (பகைவர் கோட்டையை வளைத்து அழிப்பது)

ஸ்ரீ புயவீர விற்பன் எயில் நாடன்
மலைத் தோழன் எயிலெறிந்து பட்ட ஞான்று
எயில் நாடர் இட்ட கல்''[33]

தும்பை (இரு பெரும்படையும் எதிர் எதிர் பொருவது)

''ஸ்வஸ்தஸ்ரீமது புஜபலச் சக்கரவர்த்தி பிஜ்ஜன தேவ
ரசர் சுகமாயும் புத்தியோடும் ராஜரீகம் செய்து
இருக்க வனவாசி நாட்டுத் தண்ட நாயகனாகிய
பத்மரசன் ஏவலாய் தட்சிண கேதாரத்துத் தேவர்
பாதாராதகராகிய வாமசக்தி தேவரைக் கட்டிப்
பிடித்ததில் தொணவத்தியிலிருக்கும் மெறெ
காரண ஞகிய பாபெய நாயகன் செருச்செய்து
ஸ்வர்க்கத்தனானதை இக்க மருமகன் மது செய
பாபெயன் கல்லை நட்டு வீரசாலை எடுப்பித்தான்''[34]

---

31 செங்கம் நடுகற்கள் 1968/35
32. செங்கம் நடுகற்கள் 1971/116
33. ஆய்வுத்தேன் பக் 63
34. செந்தமிழ் 3 (து. அ. கோபிநாதராவ் கட்டுரை)

**வாகை (வெற்றி பெறுவது)**

"வாய்த்தபுகழ் மங்கலத்து வந்தெதிர்ந்த மாற்றலரைச்
சாய்த்தமகன் வென்ற சயம் பெருக—சீர்த்தபுகழ்
நிக்குவணம் கற்பொறிக்கப் பட்டான் கரையகுலச்
சொக்கனேந்த லேருலகில் தான்
இக்கற்பொறி இரட்சிப்பான் பாதம் எந்தலை
மேலே"[35]

இவ்வாறு எட்டுப் புறத்திணைகட்கு மட்டுமல்ல பல்வேறு துறைகளுக்கும் (யானை கைக்கோள், வேற்றுப் படை வரவு, செருவிடை வீழ்தல், குதிரை மறம், குதிரை வென்றி) நடுகல் சிற்பங்கள் இருக்கின்றன.[36] அறிஞர்கள் புறத்திணையை இனி நடுகல் திணை கொண்டு ஆய்வாளர்களாக.

**தலைக்கொடை நடுகற்கள்**

தெய்வத்திற்குக் காணிக்கையாகத் தம் தலையை அரிந்து கொடுக்கும் வழக்கத்தை சிலப்பதிகாரம்,[38] கலிங்கத்துப் பரணி[37] தக்கயாகப்பரணி,[39] அரிச்சந்திர புராணம்[40] முதலிய நூல்கள் கூறுகின்றன.

கம்பவர்மன் காலத்து நடுகல் ஒன்று இதனை அழகிய முறையில் கூறுகிறது.

"ஸ்ரீ கம்ப பருமற்கி யாண்டு இருபதாவது
பட்டை பொத்தனுக்கு ஒக்கொண்ட நாதன்
ஒக்க திந்தன் பட்டை பொத்தன் மேதவம்
புரிந்ததென்று படாரிக்கு நவகண்டங் குடுத்து
குன்றகத் தலை அறுத்துப் பிடலிகை மேல்
வைத்தானுக்கு ... ... ..."[41]

என்பது அதன் பகுதியாகும். தருமபுரி மாவட்டத்தில் பல ந

---

35. கொங்கு 1-1-4
36. ஆய்வுத்தேன் 61-63
37. "அடல்வலி எயினர்நின் அடிதொடு கடன்இது
மிடறு உழு குருதிகொள் விறல் தருவிலையே" (வேட்டுவவரி)
38. "அடிக்கழுத்தின் நெடும்சிரத்தை அலிவராலோ
அரிந்தசிரம் அணங்கின்கைக் கொடுப்பராலோ"
(க. பரணி கோயில் 15)
39. தலையரிந்து விடுவார்; உயிர் விடார் (த. பரணி 61)
40. அச்சமது அறத்தமது உயிர்க்கொடை
அளித்தவர் அறுத்த தலை (அரி. புராணம் விவா 121)
41. செங்கம் நடுகற்கள் பக். 12

கற்களும் சிற்பங்களும் ஒம்முறையில் உள்ளதைப் புலவர் புது போ. வேங்கடராமன் கண்டு பிடித்துள்ளார்.

### நரபலி நடுகற்கள்

சோழன் பூர்வபட்டயம் கொங்கு நாட்டில் பல ஊர்களில் நர பலி நடந்ததைக் குறிக்கின்றது. சென்னிமலை, பேரூர், அன்னூர், அவிநாசி முதலிய ஊர்களில் நரபலி கொடுக்கப்பட்டதாம்[42] நர பலி கொடுக்கப்பட்டவர்கட்கு அங்கு நடுகல் நாட்டப்பட்டது. அக்கற்கள் இன்னும் இருக்கின்றன. செப்பேட்டு வாசகத்தைப் பார்ப்போம்.

> "பாலகுமரனை அழைத்து திருமஞ்சன மாடுவித்து திருநீற்றுக் காப்புமிட்டு ஆடையுடுத்தி ஆபரணங்கள் பூட்டி அலங்கரித்துப் பாலசனமிடுவித்துப் பரிமள களப கஸ்தூரிகள் பூசி வீர சந்தனம் இடுவித்துப் பாக்கு வெற்றிலை கையில் கொடுத்து வீரகொம்பு, வீரகாளம், வீரமல்லாரி, வீரசிகண்டி, வலம்புரிச் சங்குடனே வீர மேள வாத்தியம் முழங்க பஞ்ச வண்ணக் குடைய பஞ்சமுகத் தீவட்டிகை விருது ரண வீரவளை வேங்கைப் புலிக் கொடியுடனே நடை பாவாடையுடனே நடை பாவாடைமேல் நடந்து நடன சங்கீத ராக மேள வாத்தியம் சூழ்ந்துவர சென்னிமா நகரில் நாலுவீதி மெறமனையும் வருவித்துச் சென்னி மாகாளிக்கு எதிர் நிறுத்தி அந்தப் பால குமரனைச் சமய முதலியாகிறவர் நாம் முன்பு சொன்ன நற் பலியும் உனக்கு வந்ததென்று அந்தப் பாலகுமரனை வெட்டிப் பலியூட்டி வைத்து ... ... ... ... ... ... ... ... ... ... ... ...பின்பு அந்தச் சென்னி மாகாளி பலிக்கு நின்ற பால குமரனை சாவார்க்கோல முகத்தேதியாய் ஒரு கல்சிலை விக்கிரகமும் அவனைப் பார்த்தாப்போலே பார்க்கிற முகமாக அடிப் பிதது அந்தச் சிலையை சென்னியங்கிரி ஆலயத்தில் நிறுத்தி வைத்து குமார சுப்பிரபணிய பண்டிதரைக் கொண்டு அந்தச் சிலைக்கிப் புண்யாங்க அஷ்ட மந்திரப் பிரதிஷ்டையும் செய்வித்து அபிஷேக தூப தீபாரதனை முடிப்பித்து எல்லோரும் தரிசித்துக் கொண்டு அதன் பின்பு அந்தச் சாவாரப் பலிக்கல் சிலைக்கு ... ... ... ..." என்பது அதன் பகுதி.

இன்றும் சென்னிமலையில் 'சாவான் கோயில்' என்ற கோயில் உள்ளது. திருச்செங்கோடு, கபிலமலை, திருவண்ணாமலை, மதுரையிலும் சாவான் கோயில்கள் உள்ளன.[43] [தொடரும்]

42. சோழன் பூர்வபட்டயம் முகவுரை 8, 9
43. சோழன் பூர்வபட்டயம் முகவுரை 202

# அரிக்கமேடு தொல்லெழுத்துக்கள்

புதுச்சேரி மாநிலத்திலுள்ள அரிக்கமேடு என்னும் ஊரில் ஒரு தொன்மைக் குடியிருப்பு தோண்டி எடுக்கப்பட்டது அங்கு யவனர்கள் வந்து தங்கியிருந்த அடையாளங்கள் கிடைத்துள்ளன. கி.மு. மூன்றும் நூற்றுண்டிலிருந்து கி பி இரண்டாம் நூற்றுண்டு வரையான காலக்கட்டத்தைச் சேர்ந்தவை அவை.

அங்கு கிடைத்துள்ள பானை ஓடுகள் சில எழுத்துக்களைக் கொண்டிருக்கின்றன. அவைகளின் திருந்திய வாசகம் தமிலிகா இரண்டாம் தொகுதி மூன்றும் பகுதியில் 60 முதல் 64 ஆம் பக்கம் வரை வெளியாகியுள்ளது. எழுத்துக்களின் படங்களும் வெளியாகியுள்ளன.

1. பிராகிருத மொழியில் எழுதப்பட்ட ஓடு யகமித்ரச என்று வாசிக்கப்படுகிறது.

2. தமிழில் முழுமையான சொற்றொடர்; 19 எழுத்துக்கள்; முடிவு பெற்றுள்ளது. இதுவே கிடைத்துள்ளவற்றில் மிக நீளமான வசனம்.

**சாத்தன் ஆவிஇன் கோதிரசன் ஆதிரையன்**

3. முதற்பகுதி இல்லாத நீண்ட சொற்றொடர்.

**... ... ... ... ன் தெவ்வை தத்தை கோத்திரஅள்**

4. பிராகிருத மொழி எனக் கருதப்படுகிறது.

**யது வலபூதிய் படி... ... ... ... ... ...**

Yadu Valabhuti-y pati ... ... ...

5. இதுவரை வெளியிடப்படாத எழுத்து. இதுவும் பிராகிருதம்

**... ... ... ய்யதே தமோ**

இவ்வைந்து சொற்றொடர்களும் தனித்தனி மண் ஏனங்களில் இருந்தன. இவை உணர்த்தும் பொருள் என்னவென்று சிந்தனை செய்து எழுதுங்கள், சங்கப் பாடல்கள் வாழ்ந்த காலத்தில் எழுதப்பட்டவை. குறிப்பாக கோதிரசன், கோதிராஅள் என்ற சொற்களின் பொருளை ஆராய்க.

**—கொடியன்**

## 26. காற்று வேங்கை

ஆப்பிரிக்கக் காட்டில் வான் முட்டும் வளமான மரங்களைத் தழுவிப் பறந்து செல்லுகின்ற பெருங் கழுகுகள், அங்கு வாழும் குரங்குகளைக் கொன்று உண்ணுகின்றன. இக் கழுகுகளின் தலையில் கவிகை [தொப்பி] போன்ற அமைப்பிருக்கும் அந்நாட்டார் இக்கழுகுகளைக் காற்று வேங்கை [leopard of the air] என்றழைக்கின்றனர். அக்கழுகுகள் எவ்வகை ஒலியையும், எள்ளளவும் எழுப்பாது. திடும்மென வந்து மரக்கிளைகளில் விளையாடிக் கொண்டிருக்கும் குரங்குகளை அடித்துக் கொன்று, கிளையிலேயே வைத்து உண்டு விட்டுத்தான் அவ்விடத்தை விட்டு அகலும். அக் கழுகுகள், குரங்கினுடைய நெஞ்சாங்குலை[Heart], கல்லீரல்(Lever) மண்ணீரல் [Spleen] முதலியனவற்றைப் பெரிதும் விரும்பியுண்ணுகின்றன. கிளையிலமர்ந்து கொண்டே, ஒவ்வொரு பகுதியாக தின்று எலும்புகளை ஒவ்வொன்றாகக் கீழே போடும்.

## 27. ஒலிவ மரத்தின் இலை

ஒன்றிய நாடுகள் அவை[U.N.O]யின் கொடியின் நடுவில் உலகப படம் உளளது. அப்படம் ஒரு வட்டத்திற்குள் அமைந்திருக்கும். அவ்வட்டத்தைச் சுற்றி இலைகள் வரையப் பட்டுள்ளன. அவை ஐரோப்பாவில் இத்தாலி, கிரீசு, இசுபெயின், துருக்கி- ஆசிய நாடுகளில் தழைத்து வளரும் ஒலிவ மரத்தின் இலையேயாகும். இம்மரம் பன்னூறு ஆண்டுகளாயினும், பட்டுப்போகாமல் உயிர்த்திருக்குமாம்.

## 28. வெப்ப ஆடை

குளிர்காலத்தில் அணிந்து கொள்வதற்காக வெப்பமான ஆடைகளை செருமானிய நாட்டினர் அணியப் படுத்தியுள்ளனர். இது 'டியோலின்' என்ற செயற்கை இழையினால் செய்யப்பட்டு, இடையிடையே தாமிரக் கம்பிகளை இணைத்திருக்கின்றனர். கம்பிகளின் மீது கரி [carban]யும் 'கிரனைபட்'டும் பூசப்பட்டிருக்கும். 12 வோல்ட்டு மின்கலத்தைக் கொண்டு மின்னாற்றலைச் செலுத்தினால் ஆடை வெப்பமாகும். அணிய இவ் ஆடை நன்றாக இருக்குமாம்.

## 29- முதலைக் குட்டி

அண்மையில், சென்னை பாம்புப் பண்ணையினர் முதலையின் முட்டையினைக் கொணர்ந்து அடைகாக்கச் செய்து, வெற்றி பெற்றுள்ளனர். அடைகாத்தல் முறைப்படியும், முதலைக்குட்டியினைப் பெறலாம் என்கின்ற ஆய்வில் வெற்றியடைந்தது பல்லாற்றானும் பாராட்டற்பாலதே. முதலையில் தோல் ஓர் ஏற்றுமதிப் பொருளாகையால், முதலையை மிகுதியும் அழித்து ஊதியம் திரட்டி வந்தனர். இனி, அவ்வினம் பெருக்க அரியதோர் வாய்ப்புக் கிடைத்துவிட்டது, மிக மகிழ்தற்குரியதே.

முதலையினுடைய வாயமைப்பு, பிற உயிரிகளுக்கில்லாத ஒரு சிறப்பமைப்பாகும் அது வாயைத் திறக்கும்போது அதன் கீழ்த்தாடை அசைவின்றி இருக்கும். மேல் தாடைத்தான் மேல் நோக்கி அசையும். ஆனால் பிற உயிரிகளுக்குக் கீழ்த்தாடைத்தான் தாழ்ந்தியங்கும்.

## 30. கசத்து

வியட்நாமில் Casette என்பதைக் 'கசத்து' என்கின்றனர். (ஆனந்தவிகடன் 4-8-74 பக்-70). தமிழ் ஒலிமுறைப்படியும் 'கசத்து' என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு மொழிச்சொல் அடுத்த மொழியில் இடம் பெறும்போது, அதன் தன்மையைத் தானகப் பெற்றுவிடுகிறது. நம்மவர்களுக்கு இதை எடுத்துச் சொன்னல், 'பித்தர்' பட்டம் கட்டத் தயங்கமாட்டார்கள். ஃ

# பித்தளைப் பட்டயம்

விருதுநகர் அருகில், பாவலி என்னும் சிற்றூரில் 1799 ஆண்டுப் பித்தளைப் பட்டயம் தோண்டி எடுக்கப் பட்டுள்ளது. ஒரு முதியவளின் தகவலின் மேல் விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரி மாணவர்கள் தோண்டி எடுத்தனர்.

22-10-1799 இல் மேஜர் பானர்மேன் என்ற ஆட்சியாளரால் வெளியிடப்பட்டது. வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு உதவி செய்யக் கூடாதென்றும், நாகலாபுரம் ஏழாயிரம் பண்ணை கொள்ளப்பட்டி சமீன்களிடம் மக்கள் வரி கொடுக்கக் கூடாதென்றும், வரியை நேராக சென்னை ஆளுநரிடமே சேர்க்கப்பட வேண்டுமென்று மக்களை எச்சரிக்கின்றது.

—இந்து 7 6-74.

## கொங்கு

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ | 3-50 |
| மூன்றாண்டுக் கட்டணம் | ,, | 10-00 |
| ஆயுட்கட்டணம் | ,, | 100-00 |

## தேனோலை

[பழஞ்சுவடிக் காலாண்டிதழ்]

முதல் இதழ் ஜூலை முதல்நாள் வெளியிடப்படும்

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ | 4-00 |
| மூன்றாண்டுக் கட்டணம் | ,, | 10-00 |
| ஆயுட் கட்டணம் | ,, | 100-00 |

## இலங்கையில்

| | | |
|---|---|---|
| இரண்டிற்கும் ஆண்டுக் கட்டணம் | ரூ | 5-00 |

தொகை அனுப்ப வேண்டிய முகவரி :

M. சச்சிதானந்தம்,

'பத்மனகம்' சங்கானை, இலங்கை.

தஞ்சை பழங்கலைப் பதிவு அலுவலக முகவரி :

திரு நடன. காசிநாதன் எம். ஏ.

பதிவு ஆய்வாளர் அலுவலகம்,

39, யாகப்பா நகர், தஞ்சாவூர்.

சிதம்பரம்

## மணிவாசகர் நூலகத்தின் சிறந்த நூல்கள்

—✻—

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| கம்பர் | 4-00 | பரிபாடல் திறன் | 6-00 |
| இலக்கிய விளக்கம் | 3-00 | நுண்கலைகள் | 3-50 |
| உப்பங்கழி | 4-00 | உரையாசிரியர்கள் | 15-00 |
| ஒரு நொடியில் | 4-50 | இலக்கியத் திறனய்வு | 7-00 |
| மாணிக்க விருந்து | 7-00 | சிற்றிலக்கியச் செல்வம் | 4-00 |
| கம்பர் விருந்து | 3 50 | உலகப் பெருங்கவிஞர்கள் | 3-00 |
| கவி பாடலாம் | 6-00 | காப்பியத்திறன் | 3-50 |
| வீரர் உலகம் | 3 50 | மும்மணிகள் | 3-00 |

## இப்போது கிடைக்கின்றன

| | | |
|---|---|---|
| பாண்டியர் செப்பேடு பத்து | ரூ | 16-00 |
| பல்லவர் செப்பேடு முப்பது | ரூ | 30-00 |
| ஆய்வுத்தேன் | ரூ | 4-00 |
| ஆய்வுக் கொத்து | ரூ | 5-00 |
| மதுக்கரைப் பட்டயம் | ரூ | 3-00 |

கிடைக்குமிடம் : கொங்கு, 26, இந்திராநகர்,
சென்னை-600020.

# எழுத்துச் சீர்மை

தமிழில் உகர, ஊகார உயிர்மெய்க்குறிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம்.

கு நு சு ஞு டு ணு து பு ... ... ... ... ... 18 36 உருவங்கள்

கூ நூ சூ ஞூ டூ ணூ தூ பூ ... ... ... ... 18 தேவை

இதற்கு மாறாக ஏதாவது ஒரு பக்கக்குறி போடலாமென்ற கருத்து உள்ளது. அவ்வாறு போட மூன்று வகைக் குறிகள் உள்ளன. இதனால் இரண்டே உருவங்கள் போதும்.

1. ு ூ எடுத்துக்காட்டு: கு, சு, டூ, தூ ... ...
   ஏற்கனவே பழக்கமானக் குறி. ஜுன், ஜூலை போன்றது இந்தக்குறி வடமொழியில் இல்லை. வடமொழி ஒலியைத் தமிழில் எழுதப் பயன்படுத்துகிறோம்.
2. ζ ᘔ எடுத்துக்காட்டு: கζ, கᘔ, சζ, சᘔ
   புதிதாக அமைந்த குறிகள். ‘உ’ வைத் தலைகீழாகப் போட்டுக் கொள்கிறோம். சுழித்தால் நெடில், அன்றேல் குறில்.
3. ു ൂ எடுத்துக்காட்டு: கു, கൂ, சു, சൂ.
   மலையாள மொழியில் கூட்டெழுத்துக்களைத் தவிர்த்து உகர, ஊகாரத்திற்கு மேற்கண்ட குறிகளை பயன்படுத்தப் புதிய சட்டம் கொண்டு வந்துள்ளது. தமிழின் வழிமொழியான மலையாளம் முந்திக் கொண்டது.

**கேள்விகள்**

உகர, ஊகார வரிசைக்கு

1. எந்த மாற்றமும் தேவையில்லை
2. ு ூ குறிகளைப் போடலாம்.
3. ζ ᘔ குறிகளைப் போடலாம்
4. ു ൂ குறிகளைப் போடலாம்

விரும்பினால் உங்கள் முகவரியைக் கீழே எழுதுக.

அனுப்ப வேண்டிய முகவரி :

**ஆசிரியர், கொங்கு,**

**26, இந்திரா நகர், சென்னை-600020.**

# மயிலை

புலவர் முத்து. எத்திராசன் B. A.

"கானக் காக்கைக் கலிசிற கேய்க்கும்
மயிலைக் கண்ணிப் பெருந்தோட குறுமகள்"—புறம் 332 1-2

இதன் பொருள் "காட்டுக் காக்கையின் தழைத்த சிறகை யொத்த இருள்வாசிப் பூவாற் றொடுக்கப்பட்ட கண்ணியையும் பெரிய தோளையுமுடைய இளையவள்" என்பது

இதில்வரும் மயிலை என்ற சொல் இருவாட்சி மலரைக் குறிக்கும் என்று உரைகாரர் கூறியிருப்பது பொருத்தமற்றதாகக் காணப்படுகிறது.

"இருவாட்சிக்கு மயிலையு மனங்கமழும் பேர்" என சூடாமணி நிகண்டு முதல் சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார், அரும்பதவுரைகாரர் மற்றும் மணிமேகலை உரைகாரர் வரை எல்லோரும் மயிலை என்பதற்கு இருவாட்சி என்றே பொருள் கூறிச்செல்கின்றனர். பொதுவாக உரைகாரர் எல்லோரும் இத்தவறைத் தவறாது செய்துள்ளனர். மற்றை யோரும் அதனையே பின்பற்றுகின்றனர்.

இவ்வாறு பிற்காலத்தவர் தவறு செய்வார்கள் என்று கருதியோ என்னவோ புறநானூற்றுப் பாடலைப் பாடிய அரிசில் கிழார் மயிலை மலருக்கு கானக்காக்கையின் சிறகினை உவமான மாக எடுத்துக் கூறியுள்ளார்.

இப்பொழுது கானக்காக்கை என்றால் என்ன என்றும் அதன் நிறம் எப்படிப்பட்டது என அறிந்தால் போதும் மயிலை என்பது என்னமலர் என்று நாம் அறிந்து கொள்ளலாம்.

ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் இப்பாடலின்கீழ் விளக்கவுரையில் கானக்காக்கை என்றால் கள்ளிக்காக்கை

என்று பொருள் கூறியுள்ளார். ஆனால் சங்ககாலப் பறவை களைப்பற்றி ஆய்வு செய்துள்ள பி. எல். சாமி பி. எஸ்ஸி அவர் கள் கானக்காக்கையை அண்டங்காக்கை என விளக்குவர். எது எப்படியிருந்த போதிலும் இருவகைக் காக்கைகளின் நிறம் ஏறக் குறைய கருநீலம் பெற்று விளங்குகிறது என்பதை அனைவரும் அறிவர். ஆகவே மயிலையின் நிறம் கருநீலம் கொண்டதாக இருக்கவேண்டும். அப்படியென்ருல் அது என்னமலர் என்பதே இப்போது நமது கேள்வி!

சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தமிழ் லெக்சி சனில் மயிலை என்பதற்கு இருவாட்சி என்பதுடன் காட்டு நொச்சியையும் குறிக்கின்றது. அத்துடன் 'Peocck's foot tree' என்றும் ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Pecock's foot என்றால் மயிலடி என்று பொருள். மயிலடி எதனைக்குறிக்க நின்றது. சங்க இலக்கியத்தில் அதற்கு விடை கிடைக்கிறது.

'மயிலடி யிலைய மாக்குர னொச்சி' --நற்றிணை 115

'மயிலடி யிலைய மாக்குரனொச்சி' --குறுந்தொகை 138

என நொச்சியின் இலைக்கு மயிலின்அடி உவமையாகக் கையா ளப்பட்டுள்ளது. ஆகவே Pecock's foot tree என்பது நொச்சி யைக் குறிக்கிறது என நிச்சயமாக அறிகிறோம்,

இனி நொச்சி மலரை 'மணியேர் நொச்சி' (நற்-184) 'நொச்சி ......மணிமருள்பூ' (குறுந்-138) 'நொச்சி மாஅரும்பன்ன கண்ண எக்கர் ஞெண்டு (நற்-267) எனக் குறிப்பிடுவதால் அம்மலர் நீல நிறம் பொருந்தியது என அறிகிறோம். நொச்சி மலர் கருநீலநிற முடையது என அதனைக் கண்டவர் அறிவர்,

மயிலை என்ற சொல் எப்படி அதற்கு வந்திருக்க வேண்டு மெனில் மயிலடி என்ற உவமையை மக்கள் கையாண்டிருப்பர். அதுவே மயிலை எனக் காலப்போக்கில் சுருங்கி வழங்கியிருக்க லாம்.

Phone Offi.: 83745 Resi.: 811455

# RAVI METAL WORKS

MANUFACTURERS OF

Automobile Agricultural Components
Sanitary & Pump Fittings

3/129, Dr. NATESAN ROAD,

TRIPLICANE : : MADRAS-5

# பொங்கி மகிழ்ந்திட

உணவு உற்பத்தியில் தன்னிறைவு !

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்க இளைஞர் அணி !

பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வுத் திட்டம் !

குடிசைகளுக்குப் பதில் மாடி வீடுகள் !

மனிதனை மனிதன் இழுக்கும் கொடுமை நீங்கிட

கைரிக்‌ஷாக்களுக்குப் பதில் சைக்கிள் ரிக்‌ஷாக்கள் !

இவை தமிழ்நாடு அரசின் சாதனைகளில் சில

இதே போல்

நீங்களும் கடினமாக உழைக்கிறீர்கள் !

நிறைவாக வருவாய் பெறுகிறீர்கள் !

ஆயினும்

நாடும் வீடும் பொருளாதாரத்

தொல்லைக்கு ஆட்படுகின்றன !

காரணம் என்ன ?

நாளுக்கு நாள் பெருகிடும்

மக்கள் தொகையே இதற்குக் காரணம் !

எனவே !

செழித்திடும் நன்மைகளை

நாட்டில் நிலைத்திடச் செய்ய

நாடும் வீடும் பொங்கி மகிழ்ந்திட

அமையுங்கள் அளவான குடும்பம்!

குடும்ப நலத்துறை

தமிழ்நாடு அரசு.

KONGU

பதிவு எண் :— M 8783

விரைவாக-

வேகமாக-

ஏ. பி. டி.

பார்சல் சர்வீஸ்

சேவைசெய்கிறது.



## விரைவுக்கு அனுமன்

கம்பர் சொன்னார் :

"எண்ணுக்கும்
அளவிலாத
அறிவினோர்
இருந்து நோக்கும்
கண்ணுக்கும்-
கருதும்
தெய்வ மனத்துக்கும்
கடியன் ஆனான்"

எண்ணத்தைவிட-
அளவற்ற ஞானச் செல்வர்களின் யோகக்
காட்சியைவிட-
தேவர்களின் மனத்தைவிட
வேகமாகப் பாய்ந்து சென்றான் அனுமன்.

## A. B. T. பார்சல் சர்வீஸ்

226, டாக்டர் நஞ்சப்பா சாலை, அஞ்சற்பெட்டி எண் 1414
கோயம்புத்தூர் - 18.

ஆசிரியர் : புலவர் செ. இராசு
அச்சிட்டவர் : து. இராஜலட்சுமி, ரேணுகா பிரிண்டர்ஸ், [சென்னை-20
வெளியிட்டவர் : ச. பிரகதம்..
அலுவலகம்: 26, இந்திரா நகர், சென்னை-600020